**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ்**
**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**
**அறிக்கை – 20.4.2012**

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை பெற்றால் தான் எச்செல்வத்தையும் பெற முடியும் என்பதன் அடிப்படையில், மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

நகர்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, அவசர மகப்பேறு, அறுவை சிகிச்சை போன்றவற்றிற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் அளிக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள பல்வேறு மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல், புதிய மருத்துவ நிலையங்களை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகள், 150 வட்ட மருத்துவமனைகள் மற்றும் 15 வட்டம் சாரா மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு நிறுவப்பட்டு பல் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பல் பராமரிப்பின் அவசியத்தை கிராம மக்களுக்கு உணர்த்தும் வகையில், 22 வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 208 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரத்திற்கு மூன்று நாட்கள் பல் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், 2,000–க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சை பெறும் மருத்துவமனையான சென்னையில் உள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 14 கோடி ரூபாய் மதிப்பில் பல் மருத்துவக் கல்லூரிக்கான ஒரு புதிய அடுக்குமாடி கட்டடம் என்னால் கடந்த மாதம் 3–ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

இந்த பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தமிழ்நாடு மட்டுமல்லாமல் அண்டை மாநில மக்களும் சிகிச்சை பெற வருகின்றனர்.

இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டும், பல் மருத்துவக் கல்லூரியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்திலும், தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும், இதனை ஒப்புயர்வு மையமாக, அதாவது Centre of Excellence in Dentistry ஆக தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******